R-V

/ தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 /

பொது தகவல் வழங்கும் அலுவலர் மற்றும் தமிழ்நாடு பள்ளிக் கல்வி துணை இயக்குநரின் (மின் ஆளுமை) செயல்முறைகள், சென்னை – 6.

ஓ.மு.எண்.087650/சி1/இ2/2013 நாள் : .11.2013

பொருள் : தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் – தகவல் வழங்குதல் – சார்பு.

பார்வை : திரு.கே.கே.வடிவேல், வழக்கறிஞர், கோபி என்பவரது மனு நாள் : 04.10.2013 இப்பிரிவில் பெற்ற நாள்: 29.10.2013.

*********

பார்வையில் காணும் தங்களது மனுவிற்கு கீழ்கண்டவாறு தகவல் வழங்கப்படுகிறது.

| வ. எண். | கோரும் தகவல் | அளிக்கப்படும் தகவல் |
|---|---|---|
| 1. | அரசாணை எண்.187 நாள் : 04.10.2006ன் மூலம் அரசு/நகராவை மேல்நிலைப் பள்ளிகளில் புதிதாக உருவாக்கப்பட்ட 1880 கணினி பயிற்றுநர் பணியிடங்களில், TRB மூலம் தேர்வு செய்யப்பட்டு நவம்பர் 2008ல் பணி நியமனம் செய்யப்பட்ட கணினி பயிற்றுநர் பணி விதிமுறை (Adhoc Rules) உருவாக்கப்பட்டுள்ளதா ? | அரசாணை எண்.7. நாள் : 04.01.2000<br><br>நகல் இணைக்கப்பட்டுள்ளது. |
| 2. | வினா எண்.1ல் உள்ளவாறு பணி நியமனம் செய்யப்பட்ட கணினி பயிற்றுநர் பணிவரன்முறை செய்யப்பட்டு தகுதிகாண் பருவம் முடித்து பி.எட்., கல்வித் தகுதியுடன் பணிபுரியும் கணினி பணிற்றுநர்களுக்கு பதவி உயர்விற்கு என அரசு நடைமுறை விதிகள் ஏதேனும் உள்ளதா ? | இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. |
| 3. | ஆண்டு தோறும் ஆசிரியர்களுக்கு நடத்தப்படும் பொதுக் கலந்தாய்வு இடமாறுதலில் பணிவரன்முறை தற்போது பணிபுரியும் கணினி பயிற்றுநர் இடமாறுதல் | கணினி பயிற்றுநர்களுக்கு இடமாறுதல் அளிப்பது குறித்து அரசாணை எதும் வெளியிடப்படவில்லை. |
| 4. | அரசு / நகராவை மேல்நிலைப் பள்ளியில் நியமிக்கப்பட்ட கணினி பயிற்றுநர்களின் அன்றாடம் பணி | மாணவர்களுக்கு கணினிப் பாடம் போதிப்பது இவர்களின் பணியாகும். |
| 5. | கணினி பயிற்றுநர்கள் மற்ற ஆசிரியர்களைப் போலவே மாணவர்களுக்கு பாடம் போதிக்கும் பொருட்டு நியமிக்கப்பட்டவர்களா ? | ஆம் |
| 6. | அரசு/நகரவை பள்ளிகளில் அன்றாடம் மேற்கொள்ள வேண்டியுள்ள கணினியில் தட்டச்சு செய்தல், இ–மெயில் பார்த்தல், பதில் தயாரித்து அனுப்புதல், ஆன்லைன் பதிவு மேற்கொள்ளுதல் சம்பளப் பட்டியல் தயாரித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் பொறுப்புடைய அலுவலர் யார் ? | தலைமையாசிரியர் |

www.kalvikural.com

www.kalvikural.com

| | | |
|---|---|---|
| 7. | பள்ளியில் மாணவர்களுக்கு பாடம் போதிக்கும் பணியை மேற்கொள்ளும் கணினி பயிற்றுநர்களை மாவட்டக் கல்வி அலுவலகம் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலகங்களில் கணினியில் தட்டச்சு செய்தல், இ–மெயில் பார்த்தல், விபரங்களை தொகுத்தல் போன்ற அலுவலகப் பணிகளைச் செய்ய மாற்றுப் பணியில் நியமிக்கலாமா ? | நிர்வாக நலன் கருதி முதன்மைக் கல்வி அலுவலகம், மாவட்டக் கல்வி அலுவலகத்தில் மாற்றுப் பணி புரியலாம். |
| 8. | பணிவரன்முறை செய்யப்பட்டு தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்டு பி.எட்., கல்வித் தகுதியுடன் வேறு பாடங்களில் முதுகலை பட்டம் பெற்று உரிய கல்வித் தகுதியுடன் உள்ள கணினி பயிற்றுநர்களுக்கு முதுகலை ஆசிரியர் பதவி உயர்வு வழங்கப்படுமா ? | அரசாணை ஏதும் இல்லை |
| 9. | பட்டதாரி / முதுகலை ஆசிரியர்கள் வேறு பாடங்களில் எம்.பில்., முடித்திருந்தாலும் ஊக்க ஊதியம் வழங்கப்படுகிறது. அது போன்று கணினி அறிவியல் தவிர வேறு பாடங்களில் எம்.பில்., படித்து முடித்த கணினி பயிற்றுநர்களுக்கு ஊக்க ஊதியம் வழங்கலாமா ? | ஊக்க ஊதியம் வழங்குவது குறித்து அரசாணை எண்.240 நாள் : 18.08.2010 வெளியிடப்பட்டுள்ளது. நகல் இணைக்கப்பட்டுள்ளது. |
| 10. | தொடக்கக் கல்வி வணிகவியல் பயின்ற தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பதவி உயர்வு போன்று பி.எட்., கல்வித் தகுதியுடன் உள்ள கணினி பயிற்றுநர்களுக்கும் பொருந்துமா ? | பொருந்தாது |
| 11. | பட்டதாரி ஆசிரியர்களுக்கு வெவ்வேறு பாடங்களில் இளநிலை / முதுநிலை பட்டம் பெற்றிருந்தாலும் (UG/PG Cross Major) வழங்கப்படும் ஊக்க ஊதிய உயர்வு போல் கணினி பயிற்றுநர்களுக்கும் வழங்கப்படுமா ? | இல்லை |
| 12. | மேல்நிலைக் கல்வி – தொடக்கக் கல்வி கணினி பயிற்றுநர் பணியிடத்தில் பணிபுரியும் கணினி பயிற்றுநர்களை மேல்நிலைப் பொதுத் தேர்வில் பறக்கும் படை உறுப்பினராக நியமனம் செய்ய அனுமதி உண்டா ? | தற்போது அரசாணை ஏதும் இல்லை |

25.11.13

பொது தகவல் வழங்கும் அலுவலர் மற்றும்
பள்ளிக் கல்வி துணை இயக்குநர் (மின் ஆளுமை)

www.kalvikural.com

www.kalvikural.com